மேத்தா காமிக்ஸ்

பதிப்பாசிரியர்:
முல்லை தங்கராசன்

# இரத்த விளையாட்டு



ரூ
1-50

# இரத்த விளையாட்டு

சாகஸப்பணியின் வெற்றிக் களிப்புடன், உளவுத்துறையின் லண்டன் தலைமை-யகத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தார். முதன்மை உளவாளியான ஜான் வெகுவிரைவிலேயே, ஸ்காட்லாந்தின் கானகப் பிரதேசத்தில் தனது உயிரை வேட்டையாடத் துடிக்கும் ரத்தவெறிக் கும்பல் ஒன்றின் மத்தியில் சிக்கவிருக்கிறோம் என்பதை அவர் அப்போது அறிந்தாரில்லை...




'சுள்'ளெனச் சுட்டெறிக்கும் ஜூன் மாத காலை வெயில்... லண்டன் விமான தளத்தில் தரை இறங்கினார் ஜான்...
அறிவிப்பு... ஆம்ஸ்டர்டாமிலிருந்து புறப்பட்ட ஃபிளைட் 626 மூன்றாவது வாசலருகே தரை இறங்கியுள்ளது.
ஆமாம். அதே மனிதன் தான்!


கனவான் போல உடையணிந்த அந்த இளைஞன் ஜானைத் தொடர்ந்து விமான நிலையத்திலிருந்து வெளியே வந்தான்...
மேற்குத் திசையில் வண்டியைச் செலுத்து. இறங்க வேண்டிய இடம் வரும் போது நானாகச் சொல்வேன்...


உளவாளிகளுக்குரிய கூரிய ஆறுவது அறிவு அவரது மூளைக்கு எச்சரிக்கைக் குரல் கொடுத்தது.
இதே திசையில் செல்லும் வண்டியோ என்னவோ..? ஆனாலும்... ஆரம்பத்தில் இருந்து பின் தொடர்வது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது.
நெருக்கடிமிக்க பாண்ட் தெருவில் டாக்ஸியிலிருந்து சடாரென இறங்கிக் கொண்டார் ஜான். அவர் எதிர்பார்த்தது போலவே பின் தொடர்ந்து வந்தவன் சிக்கலில் மாட்டிக் கொண்டான்.
ஸார், வண்டியை இங்கே நிறுத்தக் கூடாது.
மன்னிக்க வேண்டும். நிறுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை.
இளைஞனின் கிண்ண வடிவத்தொப்பியும், கைக் குடையும் கூட்டத்திடையே அவனை எளிதாய் அடையாளம் காட்ட உதவின...
SALON
இத்தகைய முன் அனுபவமில்லாத இளைஞனை வேவு பார்க்க அனுப்பியவன் நிச்சயம் முட்டாளாய்த் தானிருக்க வேண்டும்.


பெண்களின் அழகுநிலையம் ஒன்றில் நுழைந்த ஜானைத் தொடர்ந்து உட்புகுந்தான் இளைஞன்...
யார் நீங்கள்? எதற்காக வந்தீர்கள்?


பக்கத்தில் தொங்கிய வெள்ளைக் கோட்டு ஜானைப் பணியாளாக மாற்றியது. பின்தொடர்ந்து வந்த ஏமாளியோ மாட்டிக் கொண்டான்.
ஹேய்... வாலிபன்!
EXIT
இங்கு என்ன வேலை?
பாவம்... திருதிருவென விழிக்கிறான்.


அப்பாவி இளைஞனை பெண்கள் சூழ்ந்துகொள்ள பின் கதவு வழியே நழுவினார் ஜான்.
EXIT
போ, வெளியே!
நா... நான் சொல்-வதைக் கேளுங்கள்!
அவர்களிடம் இருந்து அவன் தப்பி வருமுன் நாம் கிளம்பி விடுவோம்!
ஹோட்டல் ஒன்றில் அறை எடுத்துக்கொண்ட பின் அருகே உள்ள விடுதி ஒன்றிற்குச் சென்றார்
என்னுடைய பெயர் ஜான், எனக்காக இங்கே யாரோ ஒருவர் காத்து இருப்பதாக...
ஆமாம், ஸார். அதோ நேர் எதிர் அறையில் இருக்கிறார்.
தான் அவனை திரும்பவும் அங்கே சந்திப்போமென சிறிதும் எதிர்பார்க்கவில்லை ஜான்...
நீயா? அந்தப் பெண்களின் பிடியிலிருந்து எப்படித்தப்பி இங்கே என்னைப் பின் தொடர்ந்தாய்?


பழக்கப்பட்ட குரல் ஒன்று சாய்வு நாற்காலியின் மறைவிலிருந்து ஒலித்தது....
யார் நீ? யாருக்காகப் பணியாற்று-கிறாய்?
மானுவலைப் பற்றிய விபரத்தை நான் கூறுகிறேன் ஜான்.


குரலுக்குரியவர் 'Q' எனப்படும் சர்வதேச குற்ற ஒழிப்புத் துறையின் தலைவர்...
வாலிப நண்பர், நமது இலாகாவின் புதிய ஏஜண்ட்.தனது இந்தப் புதிய பணியில் பயிற்சி பெறும் நோக்கோடு விமான தளத்தில் இருந்து உன்னைப் பின் தொடர அனுப்பப்பட்டவர்!


இதமாய் வெகு தீர்க்கமாய் ஒலித்த அந்தக் குரலை அமைதியுடன் கேட்டார் ஜான்.
உனக்குத் தரப்பட்டிருக்கும் பணி வேட்டைக்குழு ஒன்றினைக் கண்காணிப்பதே! அந்தக்குழு மெக்பத் என்பவரது தலைமையில் க்ளென்ராத் என்னுமிடத்திலுள்ள அவரது பண்ணையில் தங்கியிருக்கிறது. மற்றைய விபரங்களை மானுவலிடம் கேட்டுக்கொள்.
THE WESTERN HIGLANDS
WESTER ROSS
அவருக்குப் பயிற்சி தேவை என்பதை நீ புரிந்திருப்பாய். அனுபவமற்ற அவருக்கு அடுத்த இரண்டு வாரங்களுக்கு நேரடிப் பயிற்சி தர வேண்டியது உன் பொறுப்பு.


பின்னர், ஜானும் மானுவலும் வேட்டைப் பொருள் அங்காடி ஒன்றில் நுழைந்தனர்.
இந்தப் பிரத்யேக வேட்டை உடுப்புகளை நான் அணியத் தான் வேண்டுமா?
அந்த வேட்டைக் குழுவை நாம் சந்திக்கும்போது அவர்களுக்கு சந்தேகம் தோன்றக்கூடாது. நாமும் அவர்களைப் போல கனவான்களாக காட்சிதர வேண்டும்.


துப்பாக்கிப் பிரிவிலிருந்து வேட்டைத் துப்பாக்கி ஒன்றைப் பொறுக்கினார் ஜான் ...
எப்படி நாம் அந்தக் குழுவோடு போய்ச் சேருவது? நமக்கு அழைப்பு இல்லையே?
தேவையில்லை. மெக்பத் ஒருவகையில் எனக்குத் தூரத்து உறவு இதற்கு முன் அவர் என்னைப் பார்த்ததில்லை. ஆனாலும் அவருடன் சேர்ந்து வேட்டையாட அனுமதி பெற முடியுமென நம்புகிறேன்.


அன்றிரவே, வடக்கே செல்லும் துரித ரயிலில் பயணமாயினர் இருவரும் ...
நமது உளவுத்துறை அந்த வேட்டைக்குழுவைச் சந்தேகிக்கக் காரணமென்ன?
எனக்கும் தெரியவில்லை. வேட்டையில் விருந்தினர்களாய் மெக்பத்துடன் கலந்து கொள்ளும் அனைவரும் நமது கண்டத்தின் பலபகுதி-களிலிருந்தும் வந்திருக்கும் பெரும் தொழிலதிபர்கள், வேட்டை, மீன்பிடிப்பு என விடுமுறையைக் கழிக்கப் பொருத்தமானவர்களே.


வாடகைக்கார் ஒன்றை அமர்த்தித் கொண்ட மானுவல் வடமேற்கு திசையில் வண்டியைக் கிளப்பினான்.
மெக்பத் ஒரு சமூகவிரோதி என எண்ணுகிறாயா மானுவல்?
அவர் எனது உறவினர் என்பதை மட்டுமே நான் அறிவேன். அத்துடன் மெக்பத் பரம்பரை பல நூற்றாண்டு-களாக இங்கே மதிக்கத்தக்க ஒன்றாய் விளங்கி வருகிறது.
கோட்டைச் சுவரால் சூழப்பட்ட அந்தப் பெரும் நிலப்பகுதி ஒரு மூலையில் அமைந்திருந்தது.
இப்போது நாம் அத்து மீறி உள்ளே நுழைகிறோம். மெக்பத் அதனை அனுமதிக்க மாட்டாரல்லவா?
அதுதான் கிடையாது. நண்பரே, இந்தக் கானகப் பிரதேச மக்களின் உபசரிப்பு ஈடு இணையற்றது.
ஆனால் உள்ளே நுழைந்த கார் சீறும் துப்பாக்கி வெடியுடன் வரவேற்கப்பட்டது.
டுமீல்!
என்னை நீ முட்டாளாக்கி விட்டாய்!
யார் அது? நிறுத்து வண்டியை!
என்ன கொடுமை...நம்மை நோக்கித்தான் துப்பாக்கி வெடிக்கிறது!


காவலர் இருவரும் வெளிநாட்டவர். அவர்களில் ஒருவன் பிரெஞ்சுக்காரன். ஜனங்களே இல்லாத மலைப் பிராந்தியத்தில் அமைந்த அந்த பண்ணைக்கு ஆயுதந்தரித்த காவலர்களின் தேவை வித்தியாசமாய்த் தோன்றியது....
இது அடாத செயல்! ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது இங்கே!
தவறு உங்களுடையது நண்பரே. கைகளை மேலே உயர்த்துங்கள். பிரதான கோட்டைக்கு உங்களை அழைத்துச் செல்கிறோம்.


இருவரையும் வெகு எச்சரிக்கையுடன் புல்வெளியினூடே அழைத்துச் சென்றனர்...
நம்மால் இப்போது எதுவும் செய்ய இயலாதா, ஜான்?
லூயிஸ், சற்றுநில்! பூட்ஸில் கல் ஒன்று சிக்கிக் கொண்டது...



தோழனுக்கு ஏற்பட்ட அச்வுகரியத்தைக் கேட்டு பிரெஞ்சுக்காரனின் பார்வை சற்றே திசைதிரும்ப, ஜான் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கிக் கொண்டார்...
மானுவல், நீ அவனைக் கவனி!
ஏய்!




இத்தாலியக் காவலனை இமைப்பொழுது நேரத்தில் நிராயுதபாணியாக்கி இருக்கலாம். ஆனால் மானுவல் சற்றே தயங்க, அந்த இடைப்பொழுதில்...
டுமீல்!
விடு, என் தோழனை!


ஆனால் இத்தாலியனின் பதட்டமான துப்பாக்கிப் பிரயோகம் அவனது தோழனுக்கே எமனாய் அமைந்தது...
ஆ ஆ!
உன் ஆளையே சுட்டு விட்டாய் முட்டாளே!


இரண்டாவது முறையாக ஜானைக் குறி வைக்க, முந்திக் கொண்டார் சுடுவதில் சூரரான ஜான்...
டுமீல்!
டுமீல்!
அஹ் ஹ்...


அதிர்ச்சியால் குழம்பிப்போய் நின்ற தன் தொழில் முறைத் தோழனை நோக்கிப் புன்னகைத்தார் ஜான்...
இரண்டு சவ மனிதர்கள். அதாவது உன் கண நேரத்-தயக்கத்தின் விளைவால் ஏற்பட்ட துர்மரணங்கள்.
தரையில் அமர்ந்திருந்தவனை உடனடியாகத் தாக்க இயலவில்லை!


தான் பிடுங்கிச் சுட்டவனின் துப்பாக்கியை அவனது கரத்திலேயே பொருத்தினார் ஜான்...
யாரோ வரும் ஓசை கேட்கிறது.


வேட்டை உடுப்புக்களுடன் எழுவர் விரைந்து வந்து கொண்டிருந்தனர்...
என்ன நடக்கிறது இங்கே? எனது பண்ணையில் உரிமையின்றிச் சுட்டது யார்?
வருவது செல்வந்தரான உனது உறவினரும் அவரது விருந்தினர்கள் போலும் தோன்றுகிறது. ஞாபகமிருக்கட்டும்-காவலர் இருவரும் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொண்டனர்.


அடர்த்தியான கருந்தாடியும் அச்சத்தைத் தரும் கண்களுமாய் நெருங்கி வந்தான் திடகாத்திரமான உருவத்தினான் மெக்பத்...
கோட்டை நுழைவாயிலருகே நாங்கள் வந்து இறங்கிய வேளையில் தொடர்ந்து துப்பாக்கி வெடி கேட்டுக் கொண்டிருந்தது. இந்த இருவரும் மாறி மாறி சுட்டுக் கொண்டிருந்தனர். இறுதியில் ஒருவரையொருவர் சுட்டு தரையில் வீழ்ந்தனர்...
அது சரி,... நீங்கள் யார்?


பதில் கூறும் பொறுப்பினை நண்பனுக்கு அளித்தார் ஜான்...
என் பெயர் இர்வின் மானுவல். நான் உங்களுக்கு உறவினன், க்ளென் ராத் வழியே பயணப்பட்ட நானும் எனது நண்பரும் மரியாதை நிமித்தம் தங்களைச் சந்திக்க பண்ணைக்கு வந்தோம்.
மானுவல்? ஓ. கே, நீ எனக்கு தூரத்து முறை சகோதரனாவாய்.


திருப்தியுற்ற மெக்பத், பின்னால் நின்று கொண்டிருந்த கூட்டத்தை நோக்கி கையைக் காண்பித்தார்...
கீழே கிடப்பவர்கள் உங்களது விருந்தினர்கள் இல்லையென நினைக்கிறேன்...
ஊஹூம், அவர்கள் எனது பணியாட்கள். போலீஸுக்குப் போன் செய்து வரவழைக்கிறேன். பிரச்சனை இன்றி பார்த்துக் கொள்வார்கள்.
அந்த பெரும் நிலசுவான்தாரின் குரலில் கொஞ்சமும் அனுதாபம் தொனிக்கவில்லை.
க்ளென்ராத் வந்திருக்கும் உங்களை வரவேற்கிறேன், இளைஞர்களே. வேட்டையாட வந்திருக்கும் இந்தக் கனவான்கள் எனது விருந்தினர்கள் இங்கே.
வாருங்கள் மாளிகைக்குப் போகலாம்.
இறந்தவர்களைப் பற்றிக் கொஞ்சமும் சட்டை செய்யவில்லையே மனிதன்...


அந்த மாளிகை கடலோரக் குன்றின் முகட்டில் பிரம்மாண்டமான தோற்றத்துடன் காட்சி தந்தது...
அதோ நீங்கள் காண்பதுதான் நீண்ட பாரம்பரியம்மிக்க என் மெக்பத் பரம்பரையின் வாசஸ்தலம் அங்கே என்னுடன் சில நாட்கள் தங்கிச் செல்லுங்கள் இளைஞர்களே.
உங்கள் உபசரிப்புக்கு மிகவும் நன்றி.


தனது புதிய விருந்தினர்களுடன் பிரம்மாண்டமான ஹாலில் நுழைந்தான் மெக்பத்.
நீங்கள் உங்கள் துப்பாக்கிகளைக் கொண்டு வந்திருக்கிறீர்களல்லவா? இன்னும் ஒரு மணி நேரத்தில் கிளம்பவிருக்கும் மான் வேட்டைக்கு நீங்களும் வரலாம்.
நீங்களும் துப்பாக்கி ஏந்தி வருவீர்களல்லவா?


அந்தக் கொடிய கண்களில் விநாடிப்பொழுது நேரம் புன்னகை சுடர்விட்டது ...
நாம் எல்லோருமே வேட்டைக்குச் செல்கிறோம். உங்களுக்கு அது ஒரு நல்ல விளையாட்டாய் அமையும் என்பதில் சந்தேகமில்லை.
ஜானுக்கும் இமானுவலுக்கும் சேர்த்து வசதியான அறை ஒன்று தரப்பட்டது. பணியாள் ஒருவன் அவர்களது காரை கோட்டைக்குள் வந்து நிறுத்தி பெட்டி படுக்கைகளை கொண்டு வந்து ஒப்படைத்தான்...
கூடுதலான உபசரிப்பு சற்றே வித்தியாசமாகத் தோன்றுகிறது.
அடுத்த ஒரு மணி நேரத்தில் கரடுமுரடான மலைப்பாதை வழியே கிளம்பியது அந்த வேட்டைக்குழு...
வேட்டை எந்தப் பக்கமாக மெக்பத்?
எதிரே தெரிகிறதல்லவா ஒரு குன்று? அதுதான் பென்ராத் எனப்படுவது. அதன் சரிவில் மிருகங்களுக்கான மறைவிடம் அதிகம். துப்பாக்கிகளுக்கு சரியான வேட்டை அங்குதான்.


வண்டியின் பின் பகுதியில் அமர்ந்திருந்த மனிதனை நோக்கினார் ஜான்...
எனது விருந்தினர்களில் சிலர் தமது சொந்த ஆயுதங்களைப் பயன்படுத்தவே விரும்புகின்றனர்.
நம் எல்லோரது கையிலுமே துப்பாக்கி இருப்பதாகத் தெரியவில்லையே.


அடுத்துப் பேசிய மனிதன் வில்லி ஸ்டீன் எனப் பெயர் கொண்ட ஸ்வீஸ் நாட்டு லேவாதேவிக்காரனென அறிமுகப்-படுத்தப்பட்டான்...
எல்லாமே உயிர்கொல்லி ஆயுதங்கள் தான் நண்பரே. என்னுடைய வில், டேவிட்டினுடைய கழுகு, சாலமனுடைய தூண்டில் அனைத்தும் அத்தகையவையே.
அவற்றின் இரைக்கு என் அனுதாபங்கள்.


ஜானின் கண்களும் மெக்பத்தின் கண்களும் ஒன்றையொன்று ஒரு கணம் உற்று நோக்கின...
இரைக்கும் தப்பிப்பதற்கான வாய்ப்புண்டு வாலிபனே.
உணமை-தப்பிப்பதற்கான வாய்ப்புண்டு தான். ஆனால்... எதிர்த்தாக்குதலுக்கு அல்லவே.


மானுவலோ சம்பாசனை எதுவுமே கவனிக்காதவனாய் வேட்டையைத் துவக்க ஆயத்தமானான்...
நாங்கள் எந்தப் பக்கமாகச் செல்ல வேண்டும்?
இளைஞர்களான நீங்கள் இருவரும் சரிவின் மேலே செல்லுங்கள். மற்றைய அனைவரும் சரிவின் பள்ளதாக்குகளில் வேட்டையாடட்டும்.
இந்தாருங்கள் உங்களுக்குத் துப்பாக்கி.


இருவரும் மண்டிக்கிடக்கும் செடி கொடிகளினூடே மேலே ஏறினர். ஜானின் முகம் இறுகியது.
மெக்பத் கூட்டம் நம்மைத் தனித்து அனுப்புவதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது. அது நமக்கு ஆபத்தைத் தரக்கூடியது என்று என் உள்ளுணர்வு எச்சரிக்கிறது நண்பனே.


சரிவின் கீழே நின்றவர்களிடமிருந்து 200 கஜ உயரத்தில் இருந்தனர் இருவரும். ஆனால் அதிவேக ஆற்றல் மிக்க துப்பாக்கியின் டெலஸ்கோப் பார்வைக்கு அவர்கள் ஒன்றும் எட்டாத் தொலைவில் இல்லை...


ஆபத்தை உணர்த்தும் ஜானின் ஆறாவது அறிவு சடாரெனக் கீழ் நோக்கிப் பாயச்- சொல்ல கொஞ்சமும் உணராத மானுவலோ தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.
அளவுக்கதிகமாகவே கற்பனை செய்கிறீர்கள். அந்த வெளிதேச மனிதர்கள் பிற்பகல் வேட்டைக்கு வந்தவர்களேயன்றி வேறு நோக்கம் கொண்டவர்களல்ல ...
தரையோடு படு!


இருவரையும் ஒட்டி சீறி வந்த துப்பாக்கிக் குண்டு பக்கத்தில் சாய்ந்து கிடந்த மரத்தில் பாய்ந்தது. சில அங்குல வித்தியாசத்தில் இலக்குத் தவறியது அக்குண்டு ...
மடார்!
மெகபத்தும் அவனது விருந்தினர்களும் வேட்டையாட வந்தவர்கள் தான் மானுவல். ஆனால்-அவர்களது வேட்டையின் இரைப்பொருள் நாம்...நாம் தான்!


எழுந்து நின்ருன் மானுவல்.
உங்களுக்கு பைத்தியம் பிடித்து விட்டது, ஜான். வேட்டைக்காரர்கள் குருட்டாம் போக்கில் சுட்டதில் தப்பி வந்த குண்டு இது! நம்மை அவர்கள் எதற்காகக் கொல்ல வேண்டும்!
ஜான் திரும்பவும் சடாரெனக் கீழ்நோக்கிப் பாய்ந்து மானுவலைத் தன்ேேடு இழுக்க அவனது தொப்பி கீழே நழுவியது! மறுகணம் கனகச் சிதமாய் அதனை ஊடுருவிச் சென்றது குண்டு....
இதுவும் அகஸ்து மாஸ்தாய் சுடப்பட்ட குண்டுதானு?
விர்ர்ர்ர்!
ஆண்டவனே! சந்தேகமேயில்லை... நாம் வேட்டையாடப்படுகிருேம்! ஆனுல் எதற்காக?


மெதுவாக மறைவை நோக்கி ஊர்ந்தனர்......
நாம் உளவு நிறுவனம் 'Q'வின் ஏஜண்டுகள், சமூக விரோதிகளின் மறைவிடத்தை நாம் அறிவது அவர்களுக்கு ஆபத்தல்லவா?
மெக்பத் பிரபினைக் குற்றம் சாட்டுகிறீர்களா... என்னால் சற்றும் யோசித்துப் பார்க்க முடியவில்லை.
திரும்பவும் தனது வேட்டையைத் துவக்கியது அந்தத் தூர இலக்குத் துப்பாக்கி.
அந்தப் பிரபு உன் ஒன்றுவிட்ட சகோதரனாய் இருக்கலாம். ஆனால் நம்மை இப்போது அவன் ஒழிக்கப்பார்க்கிறான் என்பதுவும் சரியே!
மறைவை நாடி பள்ளம் நோக்கிப் பாய்ந்தனர்...
என்னால் இன்னும் நம்ப முடியவில்லை. எவ்வளவு நட்பாய் பழகினார்.
அதுவே சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. அதுவும் இல்லாமல் ஆரம்பத்தில் சுடப்பட்டு இறந்தவர்களைப் பற்றி அவன் எள்ளளவும் கவலை கொண்டவனாயும் தெரியவில்லை...


தொடர்ந்து பேசுவதன் மூலம் அனுபவமற்ற தன் தோழனின் பதட்டத்தைத் தணிக்க முற்பட்டார் ஜான்...
என்னுடைய யூகம்... இது ஒரு போதைப் பொருள் கடத்தல் கும்பல் என்பதே.


பிரெஞ்சு நபரான ஜார்ஜ் வில்லியமும், இத்தாலியனான ராபர்ட்டும் மெக்பத்துடன் குன்றின் சரிவில் நின்றிருந்தனர்.
நாம் தேடும் இரை மாயமாய் மறைந்து விட்டதே!
இப்போது என்ன செய்வது மெக்பத்?
நமது மற்றொரு விருந்தினர்க்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்போம் வேட்டையாட.


மெக்பத்தின் ஜெர்மன் நாட்டு விருந்தினன், ஏற்கனவே தன் கையிலிருந்த கழுகின் முகக் கவசத்தை நீக்கித் தயாராய்க் காத்திருந்தான்.
உன்னுல் வேட்டையில் வெற்றி காண முடியுமா டேவிட்?
முயற்சிப்போம்! மனித வேட்டைக்கு அதனை நான் இதுவரைப் பழகியதில்லை!


டேவிட் தன் வளர்ப்புக் கழுகினை உயரே பறக்க விட்டவாறு
இரையின் இருப்பிடத்தைக் கண்டுபிடி என் பறவை நண்பனே! அத்தோடு மறைவிடத்திலிருந்து வெளியே விரட்டி வா!


பதுங்கிய நிலையில் தன் துப்பாக்கியினைச் சோதித்த ஜானின் கண்களில் ஏமாற்றம் குடி கொண்டது...
நம் துப்பாக்கிகளில் குண்டுகளுக்குப் பதிலாக கற்களை நிரப்பித் தந்திருக்கிருன்!
முன்னேற்பாடான திட்டம்தான்... அதோ அங்கே பாருங்கள்!


விரித்த சிறகும்
கொலைவெறிக் கண்களுமாய்
பாய்ந்து வந்தது அந்தக் கழுகு.
ஜெர்மானியனின் வேட்டைக் கழுகு!
அதன் கூரிய நகங்களில் கவனம்!


தலையைக் குறியாய்க் கொண்டு பாய்ந்து வந்த அந்தக் கொலை வெறிப் பறவையின் தாக்குதலுக்குத் தப்ப ஆளுக்கொரு பக்கமாய் உருண்டனர் இருவரும்.
கழுகு வானத்தில் வேட்டையாடும். ஆனால் இரக்கைகளற்ற இந்தக் கொடியவர்களோ தரையில் தம் இரையினை அழிக்கத் துடிக்கின்றனர்.
போதும் உதாரணப் பேச்சு. முதலில் இங்கிருந்து தப்பும் வழியைப் பார்ப்போம்!


தங்கள் இரை மறைவிலிருந்து வெளிப்படவே, வேட்டை வெறியர்கள் தம் துப்பாக்கிகளால் குறி பார்க்கலானார்கள்.
டுமீல்!
வில்லியமின் குறி தவறிவிட்டது. அடுத்து உனது முறை ராபர்ட்!
நன்றி மெக்பத்-விருந்தினர்கள் அனைவருக்கும் சமவாய்ப்புத் தருகிறீர்கள்!


கழுகின் கூரிய நகங்களுக்குத் தப்ப முற்பட்டு ஓட, துப்பாக்கிகளுக்குத் தம்மை இலக்காக்கும் நிலை ஏற்பட்டது...
டுமீல்!
உயிர் தப்பும் வழியில்லை ஜான்!
மனம் தளர வேண்டாம்! உன் தொப்பியைக் கொண்டு கழுகினைத் திசை திருப்பப் பார்க்கிறேன்!


நேரெதிரே வீசப்பட்ட தொப்பியினை தன் கால்களில் பற்ற சடாரெனப் பாய்ந்தது கழுகு...
எழுந்து மறைவிடம் ஓடு! தொப்பியில் அது தன் கவனத்தைச் செலுத்தியிருக்கும் இந்தக் கணப்பொழுது நேரமே நமக்கொரு வாய்ப்பு!


மறு விநாடி 'கிறீச்' என்னும் மரண ஓலம் கேட்டது மேலே...
என்ன அதிர்ஷ்டம்! எவனோ ஒருவன் பறவைக்குக் குறி வைத்து விட்டான்!


மேலும் தாமதிக்காமல் சரிவின் மறுபுறம் சரசரவென இறங்கினர் ஜானும் மானுவலும் ...
மரங்களை நோக்கி ஓடி வா! அங்கே மறைந்து கொள்வது எளிது!
துப்பாக்கி சுடுவது ஏதோ காரணத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கிறது.


அங்கே மெக்பத்தின் விருந்தினர்களுடையே மோதல்.
முட்டாளே! எனது அருமைக் கழுகினைக் கொன்று விட்டாயே!
நா...நான்... அவனது தொப்பிக்கல்லவா குறி பார்த்தேன்!
நிறுத்துங்கள் உங்கள் சண்டையை. நம் மனித இரையை தப்பிவிடக் கூடாது!


மெக்பத் தனது மற்றொரு விருந்தினை ஸ்விஸ்தேச வில்லி ஸ்டீனுக்கு அடுத்த வாய்ப்பினைத் தந்தான் ...
காட்டைச் சுற்றிலும் நான் துப்பாக்கிக் காவலுக்கு ஏற்பாடு செய்து கொள்கிறேன். நீ மரங்களிடையே புகுந்து உன் வேட்டையை முடிப்பாயா ஸ்டீன்?
மகிழ்ச்சி மெக்பத்! எனது வாய்ப்பை எதிர்பார்த்தே இதுவரை காத்திருந்தேன்!


ஸ்டீன் ஒரு குறி தவறாத வில் வீரன்.
மெக்பத்தின் துப்பாக்கிகளுக்கு வேலையே இல்லை. குறி தவறாத என் அம்புகள் இலக்கின் மீது பாய்ந்து செவ்வனே முடித்துவிடும்.


ஜானும் மானுவலும் தொடர்ந்து காட்டினுள் ஓடிக் கொண்டிருந்தனர்
நாம் வேட்டையாடப்படுகிறோம் என்பதை இன்னும் என்னால் நம்ப முடியவில்லை.
இது உண்மையிலேயே உனக்கு சரியான பயிற்சி, மானுவல்.


அடுத்த தாக்குதல் அவர்கள் சற்றும் எதிர்பாராத ஒன்று. 'விஷ்' என்ற ஓசை காதில் விழ, இடையே புகுந்து மரத்தில் குத்திட்டு நின்றது கூரிய அம்பு ...
ஹேய், என்ன இது!
வேறென்ன... ஸ்விஸ்காரனின் வேலைதான்!
இம்முறை வெகு கவனமாய் அம்பினை விட்டான் எதிரி....
வீவிங்!
துப்பாக்கியாயிருந்தால் வெடியோசை என் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்து விடும். வில் அப்படியல்ல ... ஓசையின்றி காரியத்தை முடித்து விடும்!


ஜானைக் குறி பார்த்து வந்த அம்பு அரை அங்குல வித்தியாசத்தில் சட்டையோடு சேர்த்து மரத்தில் 'பின்' பண்ணியது...
வாருங்கள்! மறைவிடம் நோக்கிப் பாயுங்கள்! அடுத்த அம்பு புறப்பட்டு வருகிறது!
மேலும் நெருங்கி விட்டது அம்பு!
சர்ர்ரக்!
இலைதழைகள் கனமாய்ப் பாய் விரித்திருந்த தரையில் சடாரெனப் பாய்ந்தனர்...
விர்ர்ர்ர்!
பயிற்சியில் நல்ல முன்னேற்றமிருக்கிறது உன்னிடம்!
பாடம் எனது உயிரைக் குடிக்காதிருக்கும் என நம்புவோமாக!


தரையிலேயே ஊர்ந்த வண்ணம் ஆழமான ஆற்றுப் படுகை ஒன்றினை வந்தடைந்தனர்...
நீ ஒரு விரட்டப் பட்டு வரும் மிருகமாயிருந்தால் இப்போது என்ன செய்வாய் மானுவல்?
நதியினுள் சடாரெனக் குதிப்பேன்!


விரைந்து ஓடும் நதி அவர்கள் குதித்த இடத்தில் ஆழமான குளம் ஒன்றை உருவாக்கியிருந்தது ...
ஓ கே!
இந்த நதி நீரினுள் அவர்களால் நம்மை வேட்டையாட முடியாது!


ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது போல் எதிரிகள் வாவாயிருக்கவில்லை. நதிக்கரையில் இருவர் தயாராயிருந்தனர்...
சாலமன்! டிமிக்கி கொடுத்த அந்த இருவரும் நதியிடம்தான் தஞ்சம் புகுந்திருப்பார்கள்!
கவலையை விடுங்கள் .. இனி என்னிடமிருந்து அவர்கள் தபபமுடியாது!


ஜான், அங்கே பாருங்கள்!
நீரோட்டதோடு சேர்ந்து நீந்தி வந்த ஜானும் மானுவலும் ஒரு வளைவில் திரும்பிய போது தயாராய்க் காத்திருந்தான் சாலமன்...


கனத்த இரும்புக் குண்டுடன் இலக்கு நோக்கி விரைந்து வந்தது தூண்டில் ...
ம்....ஆழமாக மூழ்கு! இந்தக் கூரிய கொக்கியிடம் சிக்கினால் உன்னால் எளிதில் விடுபட முடியாது!
...ஸ்விஸ்ஸ்ஸ்


நீரினுள் பாய்ந்த ஜான் முகத்தைச் சமயத்தில் சடாரெனத் திருப்பிக் கொள்ள ஆபத்து வெகு அருகாமையில் விலகியது ...


தூண்டிலைச் சுருக்கிக் கொண்ட எதிரி, தன் அடுத்த முயற்சியில் கவனமான குறியுடன் முழு பலத்தையும் பிரயோகித்தான்...
நீ எவ்வளவு ஆழத்தில் மூழ்கினாலென்ன... இது உன்னை லேசில் விடாது.


இம்முறை அந்த ஆபத்தான கொக்கி, மானுவலின் தோலில் சென்று தைத்தது...


கொஞ்சமும் தொய்வு விடாவண்ணம் முரட்டுத்தனமாய் மேல் நோக்கித் தூண்டிலை இழுத்தான் கொடியவன்...
இரை வசமாய்ச் சிக்கிக் கொண்டது. இனி தப்பிப்பது சுலபமல்ல!


தூண்டிலிருந்து விடுபட பயனின்றிப் போராடும் மானுவலின் முகத்தில் தாங்கமுடியாத வேதனையைக் கண்டார் ஜான்...
மாட்டிக் கொண்டானே!


ஆனால் மானுவலின் சமயோசிதம் அந்தச் சந்தர்ப்பத்தில் சரியாக வேலை செய்தது. இழுத்த இழுப்புக்கு வராமல் தானாக முந்திக் கொண்டு மேல் நோக்கி நீரினுள்ளிருந்து வெளிப்பட்டான்...
ஏ, தூண்டில் பிசாசே, என்னை அவ்வளவு எளிதில் கைப்பற்றி விட முடியாது!


தூண்டில் கயிற்றினை கையில் பலமாகப் பற்றி சுண்டி இழுத்தான் மானுவல்...
ஆ ஆ!
பிரமாதம்!


சற்றும் எதிர்பாராத எதிரி. குப்புறச்சாய
பாறை மீது படாரென மோதியது தலை ..
படார்!
அவனால் இப்போதைக்கு எழுந்திருக்க முடியாது, வா அருகில் செல்வோம்...


இவனைத் தெரியும். பெயர் சாலமன் ஹாலந்து தேசத்து பெரும் போக்கிரிக் கும்பல் ஒன்றின் தலைவன். என்னை நம் உளவுத்துறை லண்டனுக்குத் திரும்ப அழைத்த வேளையில் இவனை நான் ஆம்ஸ்டர்டாமில் தேடிக் கொண்டிருந்தேன்
ஜானின் கண்களிலிருந்து இரக்கம் மறைந்தது.
நாம் முதலில் வேட்டைக் குழுவை இங்கே சந்தித்த போது இவனைச் சரியாக அறிமுகப்படுத்தாதன் காரணம் இப்போது தான் புரிகிறது...


சுயநினைவற்றுக் கிடந்த சாலமனின் மீது அவர்களது கவனம் நிலைத்திருந்த வேளையில் மேலே புதர்களிடையே சலசலப்புக் கேட்டது.
இவன் என்னை முதல் பார்வையிலேயே அடையாளம் கண்டிருப்பான். மற்றவர்களிடம் கூறியிருப்பான். நம்மை அவர்கள் வேட்டையாட முயற்சிப்பதன் காரணம் அதுதான்.
அப்படியானால் இது ஒரு பயங்கரக் கும்பல் என்ற உங்களின் கணிப்புச் சரிதான்.


மறு நிமிடம் அங்கே மெக்பத்தின் குரல் எந்தவித உணர்ச்சியையும் காட்டாத வழக்கமான கடினத்துடன் வெளிப்பட்டது.
உங்கள் இருவருக்கும் இந்த வேட்டையில் தப்பிக்கப் போதுமான வாய்ப்பு கொடுத்து விட்டேன். இனி உங்கள் மரணத்தில் தவறுதல் நேரவிட மாட்டேன்.


துப்பாக்கிகள் சூழ கோட்டையினுள் அழைத்துச் செல்லப்பட்டனர் இருவரும்.
அங்கேயே எங்களைக் கொல்லாமல் இங்கு ஏன் அழைத்து வருகிறாய் மெக்பத்?
உங்கள் உடலை மறைப்பதில் சிறிது பிரச்சனை இருக்கிறது. உங்கள் மறைவு என்னோடு சம்பந்தப்படுத்தப்படுவதை நான் விரும்பவில்லை.


கற்கோட்டையின் நிலவறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
எனது விருந்தினர்கள் இன்று நடுநிசியில் தம் தாயகம் கிளம்புகின்றனர். அவர்களது பயணத்தின் போது நீங்கள் இருவரும் நடுக்கடலில் அமிழ்த்தப்படுவீர்கள்.


உங்களது தலைமை என்னைச் சந்தேகிக்கக்கூடும். ஆனால் அதற்கான ஆதாரம் இருக்காது அவர்களுக்கு. உங்களது பயண நோக்கத்திற்குக் கிடைத்த பரிசு மரணம் தான்.


கனத்த கதவு தாளிடப்பட சுற்றிலும் நோக்கினார் ஜான்...
அவன் சொன்னது சரியே. இந்த ஸ்காட்லாந்தில் இவர்களது சமூக விரோத நடவடிக்கைகள் என்னவென்றே இதுவரை நாம் அறியவில்லை. பின் தப்பிச் சென்று ஆராய்வது எப்படி?
சாலமன் வீசிய இந்தத் தூண்டில் முள் என்ன கூர்மையாயிருக்கிறது...


ஜானின் கண்களில் நம்பிக்கை சுடர் விட்டது...
உன்னிடம் தூண்டில் முள்ளும் அத்துடன் அறுந்த சிறிதளவு அறுந்த கயிறும் உள்ளதோ?
பயனுள்ள காரியம் செய்தாய்... இதன் மூலம் தப்பிக்க முயற்சிப்போம்.
கதவின் மேலிருந்த கம்பித் தடுப்பினூடே தன் தூண்டிலை நழுவ விட்-டார் ஜான்...
நமக்கு வசதியாய் சாவியைத் துவாரத்திலேயே விட்டு வைத்திருக்கின்றனர்!
வெகு சீக்கிரத்தில் சாவியை கொக்கியின் மூலம் வெளியே இழுத்து மேலே கொண்டு வந்தார்...
அடுத்து என்ன செய்யப் போகிறோம் ஜான்?
மெக்பத்தும் அவனது கூட்டாளிகளும் தமது தொழில் சம்பந்தப்பட்ட கடைசி நேர கலந்துரையாடலில் ஈடுபட்டிருப்பார்கள். அப்படி நடப்பின்-அதனை நாம் கேட்டறிய வேண்டும்.
கடக்! கடக்!


அடுத்த பத்து நிமிட நேரம் கோட்டையின் வெறிச்சோடிக் கிடக்கும் நெடிய பாதைகளில் வெகு எச்சரிக்கையுடன் நடந்து வந்தனர் ...
அதிர்ஷ்டம் நம்மைக் கைவிடவில்லை மானுவல்!
விபரங்களைத் தெரிந்து கொண்டீர்களல்லவா நண்பர்களே. தொழிலில் பெயர்களைச் சுருக்கி வைத்துக் கொள்வது ஒரு பாஷன் அல்லவா... ஆகவே நாமும் நம்மை ஐ. கு. கழகம் என அழைத்துக் கொள்வோம். அதாவது ஐரோப்பிய குற்றவியல் கழகம்!


மேலை ஐரோப்பா முழுக்க வியாபிக்கும் வண்ணம் பெரும் குற்றச் செயல்களை திட்டமிட்டு நடத்தி வருகிறோம் நாம்.
இந்த மெக்பத் கோட்டை நம் எதிர்காலத் திட்டங்களை வகுக்க ஒரு சந்திப்புக் கேந்திரமாக விளங்குகிறது.


அவர்களது பேச்சினை உற்றுக்கேட்ட வண்ணம் தனது திட்டங்களை வகுக்கலானார் ஜான்...
சற்றே வேட்டையில் ஈடுபட விரும்பும் வேளையில் உங்கள் கோட்டை நமக்கெல்லாம் ஒரு உல்லாசமையமாகவும் விளங்குகிறது மெக்பத்!
சரி விஷயத்திற்கு வருவோம், ராபர்ட். போதைச் சரக்குடன் நீங்கள் ஐரோப்பா கிளம்பும் நேரம் வந்து விட்டது. நம் ஜெயில் கைதிகளையும் திட்டமிட்டபடி தீர்த்துவிடுங்கள்.
'Q' உளவாளிகள் இருவரும் காவலற்ற கோட்டைவாசல் ஒன்றின் வழியே வெளியே வந்தனர்...
போன் செய்வதற்கு வசதியான அருகாமை இடம் ஒன்றிற்கு உடன் செல். நமது 'Q' உளவுப்பிரிவினை உஷார்ப்படுத்தி இவர்களது
படகினைத் தடுக்க கடற்படைக் கப்பலை நிறுத்தி வைக்கச் சொல். நான் இங்கே தங்கி இவர்களது செயலைச் சற்று தாமதப்படுத்துகிறேன்.
மானுவல் வெளியேறிச் செல்ல மீண்டும் கோட்டையினுள் ஓசையின்றி நுழைந்தார் ஜான்...
நடுநிசியில் கிளம்ப வேண்டும்... இப்போதே தயார்படுத்தினால் நல்லது.
இவர்களைத் தாமதப்படுத்த வேண்டுமென்றால் நாம் இருண்ட அறையிலிருந்து தப்பிவிட்டதை அறியச் செய்ய வேண்டும்.


வில்லி ஸ்டீனைத் தொடர்ந்து அவனது படுக்கை அறையினுள் நுழைந்தார் ஜான். கதவருகே இருந்த அம்புகள் கண்ணில்பட...


ஓசை கேட்டு திரும்பிய ஸ்டீன் பேயறைந்தவனானான்.
ஓ ஓ...
செவ்விந்தியருக்கு நிகராய் அம்புகளைக் கையாண்டாய் அல்லவா நீ?


அவனது உடம்பில் சிறிது கீறலைக்கூட ஏற்படுத்தாவண்ணம் சட்டையோடு சேர்த்து சுவரில் அம்புகளால் குத்தி நிறுத்தினார் ஜான்.
இப்போ எப்படி இருக்கு ஸ்டீன்?
அஹ்-ஹ்!


அவனை அந்த நிலையிலேயே விட்டுவிட்டு அடுத்தவனைத் தேடிச் சென்றார்.
டேவிட்... தனது உயிர் கொல்லிப்பறவையால் எங்களை வேட்டையாட முற்பட்டவன்!


பக்கத்திலிருந்த நூலக அறைக்குள் அவன் நுழைய-
பரவாயில்லை... கைக்கெட்டிய உயரத்திலேயே இருக்கிறது இந்தப் பாடம் செய்யப்பட்ட கழுகு... இதன் மூலமே இவனைப் பயமுறுத்துவோம்.


திடுக்கிட்டுத் திரும்பிய அந்த ஜெர்மானியனை நோக்கி எடுத்து வீசினார் ..
விர்ர்ர்ர்ர் !!
தாக்குதலுக்கு ஆளாவது இப்போது உன் முறை டேவிட்
எ-என்ன ...?


அதே வேளையில் வெளியே ஜெர்மானியன் போய்க் கொண்டிருந்தான் ...
ஆ ஆ!
மடார்!


குழப்பத்தில் தடுமாறிப் பின்
சாய கழுகு சரியாக அவன்
மேலேயே தாக்கியது...
தூண்டில்
வீரன்
சாலமன்.


ஜான் தனது மூன்ருவது எதிரியைத் தேடி
அந்தப் பழமையான சமையலறைக்குச
சென்ருர்.


வளையத்தின் 'கிறீச்' ஒலி கேட்டு சரேலெனத் திரும்பினான் எதிரி.
கிறீறீச்!
இந்தக் கொக்கியின் அளவு உனக்குப் போதுமானதா என்று பார் சாலமன்.
ஜான்!...


சாலமன் சற்றே குனிந்த வேளையில் சட்டையில் குத்தி மாட்டிக் கொண்டது கொக்கி
சர்ர்க்!
ஆ-ஆவ்!


மெதுவே புன்னகைத்தவண்ணம் கூரை உச்சியை நோக்கி இழுத்தார் ஜான்
தன்வினை தன்னைச் சுடும் என்ற பழமொழியின் அர்த்தம் புரிந்ததல்லவா, சாலமன்?


கோட்டையின் ஆயுத அறைக்குச் சென்று தேவையான துப்பாக்கி ஒன்றை எடுத்துக் கொண்டார்.
இந்த மூவரும் வெகுவிரைவில் விடுபட்டு அபாய ஒலி எழுப்புவர். முன்னதாக ஏனையோர்களுககும் அவரவர் வழியிலேயே அதிர்ச்சி வைத்தியம் தர வேண்டும்...


ஆலோசனைக் கூட்டம் நடந்த அறைக்கு மேலிருந்த பால்கனிக்கு திரும்பவும் சென்றார் ஜான். அங்கே ..
அறைக்குச் சென்ற சாலமனும் மற்றவர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?


பதில் கிடைக்குமுன்னர் படாரென வெடித்துச் சிதறியது பூ ஜாடி...
குபீஸ்!
ஹே...
பட்ட்! படார்!


குறி உங்களுக்கு வைக்காததை எண்ணி ஆனந்தப்பட்டுக் கொள்ளுங்கள். பயத்தில் உங்கள் ரத்தத்தை உறையச் செய்ய வேண்டுமே தவிர சிந்தச் செய்வது என் நோக்கமல்ல!
குபீஸ்!


தொடர்ந்து தம்மை உராய்ந்து செல்லும்
துப்பாக்கிக் குண்டுகளால் பயமுற்று
பதுங்கினர் மூவரும்.
அது ஜான் தான்! எப்படி அவனால் தப்ப முடிந்தது?
மடார்!
நாம் இப்போது எப்படி உயிர் பிழைப்பது மெக்பத்? அவனது கருணை கிடைத்தால்தான் உண்டு!


வில்லி ஸ்டீனும் ராபர்ட்டும் தம் அறையில்
இருந்து விடுபட்டு சாப்பாட்டு ஹாலுக்கு
ஓடி வந்தனர்...
என்ன இது?
டமால்
சீக்கிரம், முட்டாள்களே. மசமசவென்று நிற்காதீர்கள். கையில் கிடைக்கும் துப்பாக்கி கொண்டு மேலே நிற்கும் ஜானைச் சுட்டு வீழ்த்துங்கள்!


கடைசி ரவையையும் சுட்டு முடித்தபின், எதிரிகள் சூழுமுன்னர் விரைந்தார் ஜான்...
என்னைத் தேடுவதில் அவர்கள் நேரத்தை வீணாக்க வேண்டும். மானுவல் கடற்படைக் காவலுக்கு ஏற்பாடு செய்திருப்பானென நம்புகிறேன்...


சமூக விரோத சக்திகளின் படகுப் பயணத்தைத் தாமதப்படுத்தும் தன் முதல் நோக்கத்தில் வெற்றி கண்டார் ஜான்...
வெளிக் கதவுகள் அனைத்துமே தாளிடப்பட்டிருக்கின்றன. ஆகவே இருவரும் கோட்டைக்குள்தானிருக்க வேண்டும்! தேடுங்கள்!
இவர்களது தேடும் படலத்திற்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரமாகலாம்...


நாசக் கூட்டம் முழுமுச்சாய் மூன்று மணி நேரம் கோட்டை முழுக்க விடாது அலசியது.
பொழுது புலரும் நேரம் நெருங்கி விட்டது. நீங்கள் உடனே கிளம்பியாக வேண்டும்.
அந்த மாயப் பிசாசுகள் மறைந்து கொள்வது எளிது... நம்மால் தான் கண்டு பிடிக்க முடியாது.


அவசரமாய்க் கிளம்பும் அவர்களை கவனித்தார் ஜான்...
உங்களது ஐரோப்பிய விநியோகத்திற்கு ஓரிரு மாதங்களுக்குப் போதுமான அபின் படகில் ஏற்றப்பட்டிருக்கிறது - அடுத்து ஒரு கப்பல் சரக்கினை விரைவில் அனுப்பி வைக்கிறேன்.
நம்முடைய தொழிலுக்கு இடைஞ்சலாய் வந்திருக்கும் அந்த ஜானை உயிரோடு தப்ப விட்டு விடாதீர்கள்!



தனது ஆறு விருந்தினர்களையும்
வழி அனுப்பி வைத்த பின்
படியேறி மேலே வந்தான் மெக்பத்.
அதேசமயம் மறைவிலிருந்து
வெகு அமைதியாய்
வெளிப்பட்டார் ஜான்...
இப்போது இங்கே இருப்பது நீயும் நானும்தான் மெக்பத்.
நீயா?




சுவரில் தொங்கிய வாளினைப் பாய்ந்து எடுத்தான் மெக்பத்...
அனாவசியமாய் என்னை நீ கொல்லமாட்டாய். ஏனென்றால் நீ தொழில்முறை கொலைகாரனல்ல...


தன் எதிரியை நன்கு உணர்ந்திருந்தான் மெக்பத். சந்தேகத்திற்கிடமில்லாமல் தன் துப்பாக்கி விளைவிக்கப் போகும் மரணத்தை எண்ணி ஜான் சற்றே தயங்க...
டணல்!
ஹும்...
பன்னிரண்டு நூற்றுண்டு கால பரம்பரைக்குரிய ரத்ததாகம் என் நாடி நரம்புகளிலெல்லாம் நிறைந்துள்ளது!
அஹ்!


ஆயுதமற்ற அனாதவரான நிலையில் திரும்பி மேலே விரைந்தார் ஜான்...
லேசில் என்னிடமிருந்து நீ தப்ப முடியாது. தலையைக் கொய்வது உறுதி!


அவனது கனத்த குரல் ஆங்காரமாய் ஒலித்தது...
சட்டத்திற்கு வளையாத என் பாரம்பரிய சாம்ராஜ்யத்தை உன்னால் தகர்க்க முடியாது. ஐரோப்பிய தேச தொழில் கூட்டாளிகளின் உதவியுடன் சக்தி வாய்ந்த மனிதனாகத் திகழ்வேன்...


கோட்டையின் உச்சியில் அமைந்த யுத்த வளையத்தை அடைந்தார் ஜான். கொலை வெறி வேகத்தில் மெக்பத் தொடர்ந்து வந்தான் அங்கே...


ரத்த ருசி காணட்டும் என் வாள்...
அந்த விநாடிப் பொழுதுக்கும் குறைவான நேரத்தில் ஜான் சற்றே விலக, கொலைகாரனின் ஆவேசப் பாய்ச்சல் கோட்டையின் தாழ்வான சுவரை நோக்கித் தள்ளியது...


ஆ..ஆ..ஆ
கண் மூடித்தனமான வேகம் தலை குப்புறக் கீழே சாய்த்தது. கோட்டையின் கீழே இருநூறு அடி தாழ்வில் முரட்டுத்தனமான பாறைகள்...


இறுதியில் தனது மூதாதையர்களுடனே போய்ச் சேர்ந்து கொண்டான். அவனுக்கேற்ற சரியான முடிவு
பாறைச் சரிவிற்கு இறங்கி வந்தார் ஜான். மல்லாக்கக் கிடந்த உடலைச் சுற்றிச் சிதறித் தெளித்திருந்த ரத்தம் அந்த புலர்காலை வெளிச்சத்தில் சிவப்பாய் பிரகாசித்தது...
பலத்த இரைச்சலுடன் கடலினுள்ளிருந்து கரையை ஒட்டிய ஏரிக்குள் நுழைந்தது குண்டு வீச்சு மோட்டார் படகு ஒன்று. கோட்டையின் படகு தளத்திலிருந்து கிளம்பிய சரக்குப் படகினை மறித்துத் தடுத்தது அது.
மானுவல் சரியான நேரத்தில் நம் இலாகாவினை உஷார்ப்படுத்தி விட்டான்.
மோட்டாரின் இயக்கத்தை நிறுத்துங்கள். இல்லையோ வெடித்துச் சிதறும் உங்கள் படகு!


ஆயுதந்தாங்கிய கடற்படை வீரர்களுடன் எதிரிகளின் படகினுள் குதித்தான் மானுவல்...
இது அத்து மீறிய செயல்! அரசாங்கம் எங்களுக்கு தகுந்த பதில் சொல்லியாக வேண்டும்!
உங்கள் முறையீட்டிற்கு அவசியம் நமது அரசாங்கம் செவிசாய்க்கும் ராபர்ட். அது மட்டுமல்ல நாங்கள் இங்கே தேடிக் கண்டுபிடிக்கப் போகும் போதை வஸ்துக் கடத்தலுக்கு நீங்களும் பதில் சொல்லியே தீர வேண்டும்!



வெகு விரைவில் பிளாஸ்டிக் பைகளை வெளியே கொண்டு வந்து விட்டான் மானுவல்.
HMS
இதுவே எங்களுக்குத் தேவையான ஆதாரம். உங்களது நாசத்திட்டங்களை வெளிக் கொணர இது போதும்.


பாறை விளிம்பில் நின்று கொண்டிருந்த ஜானை நோக்கி கையசைத்தான் மானுவல்.
நாசக்கும்பலை முறியடித்து விட்டோமென எண்ணுகிறேன்!
உனது களப்பயிற்சியும் நிறைவு பெற்று விட்டது. என நான் அறிக்கை சமர்ப்பிக்கவிருக்கிறேன் ஜான்!


நான்கு தினங்களுக்குப் பின் உளவாளிகள் இருவரும் லண்டன் தலைமையகத்தில் ஆஜரானார்கள்.
பிரிட்டனில் விடுமுறையை நன்கு கழித்திருப்பாயென எண்ணுகிறேன் ஜான்.
வித்தியாசமான விடுமுறைதான் ஸார். வேட்டையாடச் சென்ற நாங்களே வேட்டைக்காளானது ஒரு புதிய அனுபவம்.


பிடிபட்ட ஆறு நாசகாரர்களும் அவரவர் தேசத்திற்கு பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கே விசாரணைக்கு நீண்ட குற்றப்பட்டியல் காத்திருந்தது அவர்களுக்கு. தனது உளவாளிகளின் பயனுள்ள பயணத்தினால் ஏற்பட்ட தனது மனத்திருப்தியினை வெளிக்காட்டாது வேடிக்கையாய் பேச ஆரம்பித்தார் தலைவர்.
தெரியுமா உங்களுக்கு, ரத்த விளையாட்டினை நான் எப்போதுமே அங்கீகரிப்பதில்லை.
நாங்களும் கூட அப்படித்தான் ஸார். அதிலும் குறிப்பாக எங்களது ரத்தம் சம்பந்தப்பட்டிருக்கும் போது!


தன்னுடைய வசிப்பிடத்திற்குத் திரும்பும் முன்னால் நட்பு முறையில் ஒரு மாலை வேளையினை மானுவலின் அறையில் போக்கினார் ஜான்...
தொழிலில் வெகு வேகமாக பயிற்சி பெற்று விட்டாய். உனது இந்த முதற் பணியின் ஞாபகார்த்தமாய் பொருள் ஒன்று தர விரும்புகிறேன். பென் ராத்திலிருந்து இதனை உனக்காகப் பத்திரப்படுத்திக் கொண்டு வந்தேன்.




தி மேத்தா பப்ளிகேஷன் நிறுவனத்திற்காக அச்சிட்டு வெளியிடுபவர்
R. அசோக் மேத்தா. முகவரி : 18, நேரு ரோடு, சிவகாசி-626 123
பதிப்பாசிரியர்: முல்லை தங்கராசன். வெளியீடு.1. ஜுலை 1984.


விரைவில் வெளிவருகிறது!
அசோக் காமிக்ஸ்
உயிரோட்டம் மிக்க சித்திரங்கள்! உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அற்புதக் கதைகள்!
வெளியிடுவோர்:
தி மேத்தா பப்ளிகேஷன்,
18, நேரு ரோடு, சிவகாசி_626123.